## பத்தாம் வகுப்பு – தமிழ்
## பயிற்சித் தாள்கள்

**மதிப்பிற்குரிய ஆசிரியர்களுக்கு,**

வணக்கம். இத்துடன் ஒவ்வொரு பாடவேளையிலும் வைக்கவேண்டிய தேர்வு பயிற்சித்தாளை இணைத்துள்ளேன்.

1. இவ்வினாத்தாளை ஒவ்வொரு பாடவேளையிலும் வைத்துத் திருத்தித் தரலாம். இதை மாணவர்கள் எப்பொழுதும் வைத்துக்கொண்டு பயிற்சி செய்யும் வினாத்தாளாகத் தாருங்கள். ஒரு வினாத்தாளை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்

2. தமிழ் முதல் தாள் 20 (ஒரு மதிப்பெண் மட்டும்) மதிப்பெண்ணிற்கும், இரண்டாம் தாளில் 70 மதிப்பெண்ணிற்கும் (ஒரு மதிப்பெண், மற்ற பயிற்சிகள்) பயிற்சி அளிப்பதன்மூலம் மாணவர் ஏறத்தாழ 50 மதிப்பெண்ணிற்குமேல் பெறுவது உறுதி.

3. இப்பயிற்சித்தாளின் பின்புறம் எழுத வைக்கலாம்.

4. ஒவ்வொரு நாள் தேர்வுக்கு முன்பாகக் கற்றல் குறைவான மாணவர்களுக்கு வினாத்தாளை முன்பே கொடுத்து வீட்டில் பயிற்சி செய்ய உதவுங்கள்.

5. ஒவ்வொரு கற்றல் குறைவான மாணவர்களுக்கான பயிற்சித்தாளைக் கோப்பாக வைத்துக் கொள்ளங்கள்.

தங்கள் மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி அடைய வாழ்த்துகள்.

**அன்புடன்**

இரா. தாமோதரன், அ.மே.நி.பள்ளி, மெலட்டூர் 614 301.

பயிற்சித் தாள் 1 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 49

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(வினா எண் 1-6) (6 மதிப்பெண்)

1. திருக்குறளைப் போற்றிப்பாடும் நூல் ......................................
2. திருக்குறள் ..................வெண்பாக்களால் ஆனது.
3. இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே எனப் பாடியவர் ............................
4. ஏலாதி ...................... ஒன்று
5. கணிமேதாவியாரின் காலம். .........................
6. மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள் ...........................
7. இளங்கோவடிகள் .......... நாட்டைச் சேர்ந்தவர்.
8. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர் ...................
9. குடும்ப விளக்கு .................படைப்புகளுள் ஒன்று.
10. பாரதிதாசனார் ..................... என அழைக்கப்படுகிறார்.
11. கம்பராமாயணம் ............... காண்டங்களைக் கொண்ட நூல்
12. சரசுவதி அந்தாதி ..............இயற்றிய நூல்களுள் ஒன்று.
13. கம்பரைப் புரந்தவர் .........................
14. நல் என்னும அடைமொழி பெற்ற நூல் ......................
15. நற்றிணையைத் தொகுப்பித்தவர் .......................
16. நற்றிணை ................. நூல்களைச் சார்ந்தது.
17. சேக்கிழார் பெருமான் அருளியது ...............
18. தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் ........
19. பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ எனப் பாடியவர் ....................
20. திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் .....................
21. அரியவற்றுள் எல்லாம் அரிது ............ பேணித் தமராக் கொளல்.
22. முதலிலார்க்கு .............. இல்லை.
23. திருநாவுக்கரசர் காலம் .............. ஆம் நூற்றாண்டு.
24. நாமார்க்கும் குடியல்லோம் என்னும் பாடல் ............ அச்சமில்லை அச்சமில்லை எனப் பாடத் தூண்டியது.
25. சீறாப்புராணம் ..............காண்டங்களை உடையது.
26. “கேழல்“ என்பதன் பொருள் ...............
27. கலித்தொகை ..............நூல்களுள் ஒன்று.
28. நெய்தல்கலியைப் பாடியவர் .................
29. போற்றாரைப் பொறுத்தல் என்பது ............. எனப்படும்.
30. பெருமாள் திருமொழியில் ............... பாசுரங்கள் உள்ளன.
31. குலசேகர ஆழ்வார் பாடல் ................ உள்ளது.
32. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர் ............
33. இன்றைய மதுரையில் ............... தமிழ்ச்சங்கம் இருந்தது.
34. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றவர் ....................
35. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று ................
36. மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் ...............பேராசிரியராகப் பணியாற்றினார்.
37. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது .................
38. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை .................
39. தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுபவர் ......................
40. பண்ணொடு தமிழொப்பாய் எனத் தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல் ..................
41. உலகம் என்னும் தமிழ்ச்சொல் ................என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது.
42. தமிழர்கள் நிலத்தை ............... வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
43. காந்தியடிகள் .............. நாடகத்தைப் பார்த்து உண்மையே பேசவேண்டும் என்று உறுதி பூண்டார்.
44. பகைவனிடம் அன்பு காட்டு எனக் கூறிய நூல் ................
45. அறநெறியாகப் போற்றப்படவேண்டியவை .......................
46. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் .....
47. வள்ளலாரின் இயற்பெயர் ...............
48. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி .....................
49. விரல்கள் பத்தும் மூலதனம் என்னும் பாடலின் ஆசிரியர் ..........................

பயிற்சித் தாள் 2 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 47

கோடிட்ட இடத்தை நிரப்புக.
(வினா எண் 7-12)
(6 மதிப்பெண்)

1. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் ................
2. மாணிக்கவாசகர் பாடல்கள் .................திருமுறையில் இடம்பெற்றுள்ளன.
3. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் ..................உள்ளது.
4. மாணிக்கவாசகர் ..................... தலைமையமைச்சராகப் பணியாற்றினார்
5. ஜி.யு.போப் திருவாசகத்தை ..................... மொழியில் மொழிபெயர்த்தார்.
6. திருவாசகத்திற்கு உருகார் .............உருகார்.
7. கைதான் நெகிழ விடேன். இதில் நெகிழ என்பது ............என்னும் பொருளில் வந்துள்ளது.
8. இறுவரை காணின் .............. தலை
9. மனவலிமையுடையோர் என்னும் பொருள் தரும் சொல் ................
10. இரட்டைக் காப்பியம் என்பன சிலப்பதிகாரமும் ....................ஆகும்..
11. நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் ................... பேரெல்லையும் கொண்ட நூல்.
12. அரி என்னும் சொல்லின் பொருள் ......................
13. கண்ணகனார் ....................அவைக்களப் புலவர்களுள் ஒருவர்.
14. புறநானூறு ............... நூல்களுள் ஒன்று.
15. போலிப்புலவர்கள் தலையில் குட்டுபவர் ...................
16. நால்வகைப் பாக்களும் வயலுக்கு ......................அமைந்துள்ளன.
17. இல்லாரை .................... எள்ளுவர்.
18. அறனீனும் இன்பமும் ஈனும் ......................_தீதின்றி வந்த பொருள்..
19. திருநாவுக்கரசரின் தமக்கையார் ......................ஆவார்.
20. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் .................. என வழங்கப்படுகிறது.
21. தாண்டகவேந்தர் என அழைக்கப்படுபவர் .................
22. சீறாப்புராணத்தை இயற்றியவர் .............................
23. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் ............................
24. கலம்பகம் .....................வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று.
25. பணை என்னும் சொல்லின் பொருள் .....................
26. தார்வேந்தன் கோல் நோக்கி வாழும் ..................... போன்றிருந்தேனே.
27. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் .......................... குலசேகரர் பாடியதாகும்.
28. தமிழர் மனித வாழ்வை .................... எனப் பிரித்தனர்.
29. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசியமொழி ..................
30. 2004 ஆம் ஆண்டு ...............திங்களில் தமிழ்மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.
31. தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் ................
32. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள் .............ஒன்று உண்டு.
33. பெரியார் சமூக முரண்களையும் ................................எதிர்த்தவர்.
34. வெறும் பேச்சுக்கும் ................பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.
35. பேச்சு முடிவில் ............... கூறிக் கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.
36. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் .................என அழைப்பர்.
37. படப்பிடிப்புக் கருவியை ..................... பொருத்துவதும் உண்டு.
38. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ...................... இருக்கும்.
39. இலெமூரியாவை ..................நாகரிகத் தொட்டில் என்பர்.
40. தனக்குவமையில்லா ஒரு ................... தமிழ் இனம்.
41. காந்தியடிகள் ...............என்னும் நாடக நூலைப் படித்தார்.
42. இன்னா செய்தார்க்கும் என்னும் திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் .............
43. இராமலிங்கர் சத்திய தருமசாலையை நிறுவிய இடம் .................
44. இராமலிங்கர் தமிழ் மொழியே ..............._தரும் என்று கருதினார்.
45. சங்க காலத்தில் பெண்கள் ..............கடந்து செல்லக்கூடாது.
46. நாள்தோறும் கல்வியில் ............... உருவாகிக் கொண்டிருக்கின்றன.
47. காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும் ..................தேர்வும் உண்டு.

பயிற்சித் தாள் 3 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 36

பொருத்துக
(வினா எண் 13-16)
(4 மதிப்பெண்)

| | | | |
|---|---|---|---|
| 1. | விரை | - | பெருகி |
| | கழல் | - | உடல் |
| | ததும்பி | - | அணிகலன் |
| | மெய் | - | மணம் |
| 2. | இடர் | - | தலைவன் |
| | நாவாய் | - | நிலவு |
| | இறை | - | துன்பம் |
| | இந்து | - | படகு |
| 3. | செறு | - | விதை |
| | வித்து | - | பனையோலைப்பெட்டி |
| | யாணர் | - | வயல் |
| | வட்டி | - | புதுவருவாய் |
| 4. | மேதி | - | சிவன் |
| | சந்தம் | - | குற்றமில்லாத |
| | கோதில் | - | எருமை |
| | அங்கணர் | - | அழகு |
| 5. | கான் | - | சிங்கம் |
| | உழுவை | - | கரடி |
| | மடங்கல | - | காடு |
| | எண்கு | - | புலி |
| 6. | பண்பு | - | கூறியது மறாஅமை |
| | அன்பு | - | பேதையார் சொல் நோன்றல் |
| | அறிவு | - | பாடறிந்து ஒழுகல் |
| | செறிவு | - | தன்கிளை செறாஅமை |
| 7. | ஈஸ்ட்மென் | - | கருத்துப்படம் |
| | எடிசன் | - | இயக்கப்படம் |
| | எட்வர்ட் மைபிரிடச | - | ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி |
| | வால்ட் டிஸ்னி | - | படச்சுருள் |
| 8. | சத்தியசோதனை | - | கிறித்தவ சமய நூல் |
| | பகவத் கீதை | - | இந்து சமய நூல் |
| | திருக்குறள் | - | காந்தியடிகள் |
| | பைபிள் | - | திருவள்ளவர் |
| 9. | வினையே ஆடவர்க்கு உயிர் | - | திருமூலர் |
| | முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை | - | தொல்காப்பியம் |
| | உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் | - | தாராபாரதி |
| | விரல்கள் பத்தும் மூலதனம் | - | குறுந்தொகை |

**பயிற்சித் தாள் 4 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 34**

**விடைக்கேற்ற வினா அமைக்க**
**(வினா எண் 17-20)**
**(4 மதிப்பெண்)**

1. பெண்கள் உரிமைப் பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியா் பெரியாா்.
2. பெரியாா் பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தாா்.
3. செய்திப் படங்களின் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்
4. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப் படக்கருவி பயன்படுகிறது.
5. தமிழா்கள் அரபு நாட்டுடனும் யவன நாட்டுடனும் வாணிகத் தொடா்புகொண்டிருந்தாா்கள்
6. காந்தியடிகள் பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதா் என்று கருதினாா்
7. இளைஞா்களின் உள்ளத்தில் நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல்வேண்டும்.
8. இளங்கலைப் பட்டம் பெற்றவா்கள் இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியா் பணியில் சேரலாம்.

**பொதுத்தோ்வு வினாக்கள்**

9. தமிழா் மனித வாழ்வை அகம், புறம் எனப் பிரித்தனா்.
10. மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது.
11. இராமலிங்கா் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் வடலூா்.
12. தொடக்கம், இடைப்பகுதி, முடிவு பேச்சின் முக்கூறுகள்
13. உலக இலக்கியங்களில் முதன்மை பெற்றவை சங்க இலக்கியங்கள்
14. இலெமூரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பா்
15. இடைநிலை ஆசிரியா் பயிற்சி ஈராண்டுகள் ஆகும்.
16. நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம்.
17. ஆசிரியா் என்பவா் அறிவுக் கடலாக மட்டுமின்றி, அறத்தின் ஆழியாகவும் விளங்க வேண்டும்.
18. இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்புப் போன்றவை.
19. திருக்குறளை மொழிபெயா்த்த உருசிய அறிஞா் தால்சுதாய்
20. வள்ளலாா் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.
21. அறிவு அற்றம் காக்கும் கருவி என்றாா் திருவள்ளுவா்
22. இலக்கணம் வகுத்தபின்பே இலக்கியம் தோன்றியது
23. தமிழ் மொழியே இறவாநிலை தரும் என்று வள்ளலாா் கூறினாா்.
24. தொழில்நுட்பப்பயிலகத்தில் பயில்வோா்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.
25. தமிழா்கள் நிலத்தை ஆறுவகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறாா்கள்.
26. பரிதிமாற்கலைஞா் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளாா்.
27. 1918இல் மும்பையில் அம்பேத்கா் சிறிது காலம் பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றினாா்.
28. வள்ளலாரின் இயற்பெயா் ராமலிங்கம்.
29. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி மேனிலைக்கல்வித் தோ்ச்சி ஆகும்.
30. நுண்ணிய நூல் பல கற்றவா்க்கே அமைந்த அரிய கலை பேச்சுக்கலை
31. இராமலிங்கா் இறையருள் பெற்ற திருக்குழந்தை என்று பாராட்டப்பட்டாா்
32. உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன.
33. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இரு கண்களாக்க் கருதினாா் எம்.ஜி.ராமச்சந்திரன்.
34. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமாகும்.

பயிற்சித் தாள் 5 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 37

## ஒரு மதிப்பெண் வினா-விடைகள்

(வினா எண் 1-10)

(10 மதிப்பெண்)

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. இளவழகன் வந்தான். இது …………தொடர்.
2. மாடு என்னும் சொல் ……………… ஆகும்.
3. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது ……….குறிக்கும்
4. வடக்கு என்னும் திசைப்பெயரொடு பிற திசைகள் வந்து சேரும்போது …………….
5. மேற்கு நாடு என்பது …………… எனச் சேரும்.
6. கருமை குழி என்பது ……………. எனும் விதிகளின் படி புணரும்.
7. பொருளிலக்கணம் ……………. வகைப்படும்.
8. அகத்திணைகள். …………வகைப்படும்.
9. மார்கழி, தை ஆகிய இரண்டும் …………. காலத்திற்குரியன.
10. மருதநிலத்திற்குரிய தெய்வம் ………………
11. பாலை நிலத்திற்குரிய பறவைகள் ………………..
12. புறத்திணைகள் …………….. வகைப்படும்.
13. மண்ணாசைக் கருதிப் போருக்குச் செல்வது ………………..
14. பாடாண்திணை என்பது ……………. கூறுவது
15. ஒரு தலைக்காமம் என்பது ………….
16. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது …………… .ஆகும்.
17. உலகு என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு ………….
18. நல்லவை – இச்சொல் அலகிட்டால் ………..எனப் பிரியும்.
19. நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி …………வரும்
20. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் ………….. முடிவது சிறப்பு

**கூடுதல் வினாக்கள் (பொதுத்தேர்வு வினாக்கள்)**

21. கீழ்வருவனவற்றுள் தொடர்மொழி .................
22. கீழ்வருவனவற்றுள் பெயரெச்சத் தொடரை எடுத்து எழுதுக .............. கயல்விழி
23. கீழ்வருவனவற்றுள் இனங்குறித்தல் சொல்லை எடுத்து எழுதுக ..................
24. எதிர்கால இடை நிலை அமைந்த வினைமுற்று ...............
25. தனிமொழியைத் தேர்ந்தெடு .................
26. ஒருபொருட் பன்மொழியைத் தேர்ந்தெடு ...................
27. வடக்கு கிழக்கு எவ்வகைப் புணர்ச்சி என்று கூறுக ..................
28. தலைவன் – இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் ................
29. ஒரு பொருட்பன்மொழியைத் தேர்ந்தெடு – ...................காணப்படுகின்றன.
30. எதிர்கால இடைநிலை அமைந்த வினைமுற்று ...............
31. ஈற்றில் ஐகாரம் குறைந்து வரும் சொல் ................
32. பொதுமொழியைத் தேர்ந்தெடு – ..................
33. ஒரு பொருட்பன்மொழிக்கு எடுத்துக்காட்டு – ..................
34. குறிஞ்சி நிலத்துப் பறவைகள் ..................
35. வரும் வண்டி – இச்சொற்களில் வரும் குறுக்கம் ................
36. கலா கலகலவெனச் சிரித்தாள் இதில் கல கல என்பது ................
37. சிறப்பு என்னும் சொல் வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு ............ஆகும்.

**பயிற்சித் தாள் 6 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 45**

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. பூங்குழலி பொம்மை செய்தாள். இத்தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது, ............ என வரும்.
2. அழகன் பாடம் எழுதுகிறான். இத்தொடரில், ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்தால் ....... தொடர் ஆகும்.
3. அன்பரசன் திருக்குறளைக் கற்றான். இத்தொடர் பிறவினையாக மாறும்போது, அன்பரசன் ......... என வரும்.
4. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ...........
5. தொழிலைக் குறிக்கும் சொல் ...........
6. வினைமுற்று ......... என இருவகைப்படும்.
7. ஓர் எச்ச வினை ........... கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.
8. ஒரு பொருள் குறித்துவரும் சொற்களையே ................. .என்பர்.
9. இது செய்வாயா என்னும் வினாவிற்கு வயிறு வலிக்கும் எனக் கூறுவது ............ விடை.
10. ஆடத் தெரியுமா என்னும் வினாவிற்குப் பாடத் தெரியும் எனக் கூறுவது ............ விடை.
11. நன்னூல் கிடைக்குமா எனக் கடைக்காரரிடம் கேட்பது ............ வினா.
12. அகம், புறம் ஆகிய இரண்டும் ..........இலக்கணம் ஆகும்.
13. குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும் .............. எனப்படும்
14. நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி ...............பகுதியாகும்.
15. யாமம் என்பது இரவு 10 மணிமுதல் ................ ஆகும்.
16. மருதம், நெய்தல் ஆகிய இரண்டனுக்கும் .............பெரும்பொழுதுகளும் வரும்.
17. திருமால் ........... நிலத்திற்குரிய தெய்வம்.
18. மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும் .................திணைக்குரிய பறைகள்.
19. நெய்தல் திணைக்குரிய தொழில் ........................ .ஆகும்.
20. இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்றுப் பல விகற்பத்தானும் வருவது ............. .ஆகும்.
21. வெண்பாவின் ஓசை .............. ஆகும்.
22. ஆசிரியப்பாவின் வேறு பெயர் ............ ஆகும்.
23. ஆசிரியப்பாவின் ஓசை ...............ஆகும்

**கூடுதல் வினாக்கள் (பொதுத்தேர்வு வினாக்கள்)**

24. மரவேர் என்பது ............. ஆகும்.
25. வேய்புரைதோள் – உவம உருபு ...........
26. நண்பகல் என்பது ............ திணைக்குரிய பொழுது ஆகும்.
27. மொழியமிழ்து – இவ்வுருவகத்திற்கான உவமை ...............
28. வௌவால் – இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் ................
29. கிளிபோலப் பேசினாள் – இச்சொல்லில் அமைந்த உவம உருபு .............
30. மாலை என்பது ............... திணைக்குரிய சிறுபொழுது ஆகும்.
31. மரவடி – இச்சொல்லில் அமைந்துள்ள புணர்ச்சி ................. ஆகும்.
32. இது செய்வாயா? என்ற வினாவிற்கு, நீயே செய் என்பது .............விடை
33. தேன்போன்ற மொழி – இதில் உள்ள உவம உருபு ..................
34. மு∴டீது – இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் .......................
35. படித்து வந்தான் – இதில் படித்து என்பது ................. ஆகும்.
36. முழவு உறழ் தடக்கை – இதில் உள்ள உவம உருபு ..................
37. இந்திரன் ..................நிலத்திற்குரிய தெய்வம்.
38. செம்மொழி ................. ஆகும்.
39. நிரை கவர்தல் ......... என்னும் புறத்திணைக்குரியது.
40. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது ................ ஆகும்.
41. விடை ............வகைப்படும்.
42. மலரன்ன சேவடி – இதில் அமைந்துள்ள உவம உருபு ..............
43. அணி என்னும் சொல்லுக்கு ............. என்பது பொருள்
44. தான் அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்வதற்காகக் கேட்கும் வினா ................
45. புகழ்வதுபோல பழிப்பதும், பழிப்பது போல புகழ்வதும் ............... ஆகும்.

(குறிப்பு – கோடிட்ட இடத்தில் உள்ளவை விடைதேர்க-விலும், விடை தேர்க-வில் உள்ள வினாக்கள் கோடிட்ட இடத்திலும் மாற்றியும் கேட்கப்படுகின்றன).

பயிற்சித் தாள் 7 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 39

## சுருக்கமாக விடையளிக்க

(வினா எண் 11-20) (மதிப்பெண் 10)

**தொடரை மாற்றி அமைக்க**

1. திருக்குறளை அனைவரும் அறிவர் - வினாத்தொடாக மாற்றுக.
2. இமயமலை மிகவும் உயரமானது - உணர்ச்சித் தொடராக மாற்றுக.
3. கிளி கல்லால் அடிபட்டது – உணர்ச்சித் தொடராக மாற்றுக.
4. வாரியார், "குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்கவேண்டும்'' என்றார் – அயற்கூற்றாக்குக.
5. நேற்று புயல் வீசியது. மரங்கள் சாய்ந்தன – கலவைத்தொடராக மாற்றுக.

**சந்திப்பிழையற்ற தொடராக மாற்றுக.**

6. கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

**ஒருமை பன்மை பிழை நீக்குக.**

7. அவன் கவிஞன் அல்ல.

**பிறமொழி சொல்லற்ற தொடராக்குக.**

8. அவர்களிருவர்க்கும் இடையே விவாதம் நடந்தது.

**வழுஉச் சொல்லற்ற தொடர் ஆக்குக.**

9. வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே.
10. எண்ணெ வில அதிகமாகிவிட்டது.
11. இன்னக்கி ஒரு கிலோ அவரக்கா வாங்கி வந்தேன்.
12. கதவ தாப்பாள் போட மறந்துட்டேன்

**தொகைச் சொற்களை விரித்தெழுதுக.**

13. இருவினை,முத்தமிழ், மூவேந்தர், நானிலம், ஐந்திணை, முக்கனி, இருதிணை, நாற்றிசை

**உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.**

14. நான் (கு) மழையில் நனைவது பிடிக்கும்.
15. அண்ணன், தம்பி வீடு (கு) சென்றார்
16. மாணவர்கள் (ஐ) வட்டமாக உட்காரச் செய்க.
17. நான் (கு) திருக்குறளில் ஆர்வம் மிகுதி.
18. வேல்விழி திருக்குறள் (ஐ) படித்தாள்.

**இளமைப் பெயர்களைப் பொருத்துக**

19. ஆடு - கன்று
20. மான் - பிள்ளை
21. கீரி - குட்டி
22. சிங்கம் - குஞ்சு
23. கோழி - குருளை

**நிறுத்தற்குறி இடுக.**

24. சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம்;சட்டம் நம்மை காக்கும்.
25. அம்பேத்கர் ஓர் இலட்சிய சமூகம் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது என்றார்.
26. தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி செல்பேசி கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன.
27. ஓட்டுநர் நடத்துநர் முதலான பணிகளுக்கும் உடற்கூறுத் தகுதியுடையவர்கள் மட்டுமே சேர இயலும்.

**பிறமொழிச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.**

28. ஷேத்திரங்கள்தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக..
29. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
30. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
31. நாளை நடக்கவிருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்.
32. நான் இந்தக் காலேஜின் ஓல்ட் ஸ்டுடண்ட்.
33. வேலன் சுயதொழிலில் அதிக இலாபம் ஈட்டினான்
34. அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.
35. அனைவரையும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்..
36. அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச் சிறந்த நிபுணர்
37. அலங்கரித்துக் கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.
38. இறைவனை நோக்கி யாத்திரை செல்லல் பக்தருக்கான மார்க்கம்..
39. எல்லா ஸ்டூடன்சும் பஸ்ஸில் ஏறி ஸ்கூலுக்குப் போனார்கள்.

பயிற்சித் தாள் 8 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 37

<u>உவமைகளைச் சொற்றொடரில் அமைக்க</u>

1. பசுமரத்தாணிபோல
2. குன்றின் மேலிட்ட விளக்குப்போல,
3. அனலிடைப்பட்ட புழுவைப்போல
4. கடலில் கரைந்த பெருங்காயம் போல
5. இலவு காத்த கிளி போல
6. அடியற்ற மரம்போல
7. மடைதிறந்த வெள்ளம்போல
8. கல்மேல் எழுத்துபோல
9. அத்திப் பூத்தாற்போல
10. மழைகாணாப் பயிர்போல
11. மலரும் மணமும்போல
12. வேலியே பயிரை மேய்ந்ததுபோல
13. கீரியும் பாம்பும்போல
14. உள்ளங்கை நெல்லிக்கனிபோல.
15. கிணற்றுத்தவளைபோல
16. நிலவும் வானமும் போல

<u>உவம உருபுகளைக் கண்டு எழுதுக</u>

17. கிளிபோலப் பேசினாள் -
18. வேய்புரை தோள் -
19. தாயொப்பப் பேசும் மகள். -
20. முழவு உறழ் தடக்கை -
21. மலரன்ன சேவடி -

<u>உவமையை உருவகமாக மாற்றுக.</u>

22. மதிமுகம் -
23. பவளவாய் -
24. மலரடி -
25. முத்துப்பல் -
26. மலர்ப்பாதம் -

<u>மரபுத் தொடர் பொருளறிக</u>

27. ஆயிரங்காலத்துப் பயிர் -
28. முதலைக் கண்ணீர் -
29. அவசரக் குடுக்கை -
30. ஆகாயத்தாமரை -
31. குட்டிச் சுவர் -
32. சீட்டுக் கிழிந்துவிட்டது -
33. கயிறு திரித்தல் -
34. கொட்டி அளத்தல் -
35. பஞ்சாயப் பறத்தல் -
36. இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்.
37. எம்.ஜி.ராமச்சந்திரன் திரைவானில் கொடிகட்டிப் பறந்தார்.

பயிற்சித் தாள் 9 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 34

**ஒருமை பன்மை நீக்குக**

1. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப்படக்கருவி என்ற கருவி பயன்படுகின்றன.
2. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் இருக்கின்றது.
3. இன்று பேருந்துகள் ஓடாது.
4. ஓர் அணில் மரத்தில் ஏறின.
5. நான் வாங்கிய நூல் இது அல்ல.
6. பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
7. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.
8. ஓர் இளம் பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.
9. மனிதனின் நோக்கம் உயர்ந்த்தாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதா.

**தொடருக்கு ஏற்ற வினா அமைக்க.**

10. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.
11. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இருகண்களாக எம்.ஜி.ராமச்சந்திரன் கருதினார்.

**சொற்களுக்கு இருபொருள் எழுதுக**

12. ஆறு -
13. திங்கள் -
14. மாலை -
15. நகை -
16. மெய் -

**மிகும், மிகா இடம் ஒன்றனுக்குச் சான்று தருக**

17. வல்லினம் மிகும் இடம் ஒன்றனக்குச் சான்று தருக.
18. வல்லினம் மிகா இடம் ஒன்றனுக்குச் சான்று தருக

**உரிய வினைமரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

19. எங்கள் பள்ளிக்குச் சுற்றுச்சுவர். ............. (கட்டப்பட்டது, எழுப்பப்பட்டது)
20. பாரதியார் செய்யுளை .............. (பாடினார், இயற்றினார்)
21. வேடன் .............அம்பு யானையை வீழ்த்தியது. (எய்த, செலுத்திய)
22. மாறன் ஓவியத்தை புனைந்தான் வரைந்தான், புனைந்தான்)
23. அந்தச் சிற்பம் ஒரே கல்லில் ............. .(வடிக்கப்பட்டது, செதுக்கப்பட்டது)

**பொருத்துக**

24. மயில் - கரையும்
25. கூகை - கத்தும்
26. யானை - குழறும்
27. காகம் - அகவும்
28. ஆடு - பிளிறும்

**சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக**

29. தமிழில் வரலாற்று கருத்துக்களையும், பண்பாட்டு கூறுகளையும் காணமுடியும்.
30. அறிவு ஒளிபெற அங்கு சோதி தரிசன புதுமையைப் புகுத்தினர்.
31. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.
32. மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகின்றது.

**வினையெச்சமாக மாற்றுக**

33. படி

**பெயரெச்சமாக மாற்றுக**

34. பிரி

பயிற்சித் தாள் 10 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 34

**அணி**
**(வினா எண் 29)**
**(5 மதிப்பெண்)**

**கீழ்க்காணும் குறட்பாக்களில் பயிலும் அணியைச் சுட்டி விளக்குக**

1. தேவர் அனையர் கயவர் அவருந்தான்
   மேவன செய்தொழுக லான் .
2. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
   சொல்லில் பயனிலாச் சொல்
3. தீயவை தீய பயத்தலால் தீயவை
   தீயினும் அஞ்சப் படும்..
4. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
   நீங்கின் அதனைப் பிற.
5. பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
   வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

பயிற்சித் தாள் 11 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 22

## ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்தல்

**(வினா எண் 34 - அ)**

**(3 மதிப்பெண்)**

1. டாடி, வர்ற சண்டெ எனக்குப் பர்த்டே, நீங்க இன்னும் எனக்குப் பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச்சொல்லிக் கால் பண்ணியிருக்கேன்.

   சண்டெ வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்கு. டோன்ட் வொர்ரி, டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போகலாம். இப்ப உனக்கு ஹேப்பிதானே."

2. சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே?

   வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனால்தான் லேட். சரி...சரி..பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கெட் கிடைச்சுதா?

   பஸ் டென் தேர்ட்டிக்கு வரும். லாஸ்ட் வீக்கே ரிசர்வ் செய்தாச்சு.

3. பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி, தன் ஸ்கூல் பேக்கைத் தூக்கிப்போட்டு விட்டு மம்மி வாட்டர் என்று குரல் கொடுத்தான்.

   பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய்? கை கால்களை வாஷ் செய்துகொண்டு வா. சூடாக உனக்குப் பிடித்த டிபன் செய்து வைத்திருக்கிறேன். போய் யூனிபாரம் மாற்றிக்கொண்டு வா என்றாள், அவள் தாய்.

   போம்மா என்று கூறிக்கொண்டு பேனைச் சுழலவிட்ட பாரி, டிவியைப் பார்த்தான்.

   ஸ்கூல்விட்டு வந்தவுடனே எதற்கு டிவி? ஹோம் ஒர்க் செய்துவிட்டு அப்புறம் பார்க்கலாம். என்றாள், அவள் தாய்.

## அரபு எண்ணைத் தமிழாக்கம் செய்தல்

**(வினா எண் 34 - ஆ)**

**(2 மதிப்பெண்)**

1. 52, 76, 183, 194, 13 , 45, 165, 789, 45, 79, 150, 250, 25, 41, 190 ஆகிய எணகளை தமிழ் எண்ணாக மாற்றுக.

பயிற்சித் தாள் 12 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 20

## ஆங்கிலப் பழமொழியைத் தமிழாக்கம் செய்தல்

**(வினா எண் 35 - ஆ)**

(2 மதிப்பெண்)

1. Old is gold
2. No pain. No gain
3. Knowledge is power
4. Haste Makes waste
5. Man proposes; god disposes
6. நினைக்கும்.
7. Self help is the best help
8. A friend in need is a friend indeed.
9. All that glitters is not gold.
10. Time is gold.
11. The Face is the index of the mind
12. Look before you leap
13. Live and let live.
14. Efforts never fail.
15. Even a pin is good for nothing
16. Failure is the stepping stone to success.
17. Work is woship
18. Health is wealth
19. Diamond cut diamonds
20. Little strokes fell Great oaks. .

**பயிற்சித் தாள் 13 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 20**

**கவிதை எழுதுதல்**
**வினா எண் 36**
**(மதிப்பெண் 5)**

1. கடல் 2. குழந்தை 3. நட்பு 4. முயற்சி 5. பள்ளி ஆகிய தலைப்பில் கவிதை எழுதுக

பயிற்சித் தாள் 14 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 10

# பாநயம் பாராட்டுதல்

**(வினா எண் 37)**

**(5 மதிப்பெண்)**

**1**

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சக மக்கள் ஒன்றென்ப துணர்வத ற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்

\- பாரதிதாசன்

**2**

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்க்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செய்யினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாதநிலைமையும்வேண் டுவனே.

\- வள்ளலார்

**3**

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்.
- பாரதியார்

**4**

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்
சீலை உடை கதருடையாய்த் திகழ வேண்டும்
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
வெற்றியின்மேல் வெற்றி எமக்கெய்த வேண்டும்
- கவிமணி

பயிற்சித் தாள் 16 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 15

## படிவம் நிரப்புதல்

**வினா எண் 38**

**(5 மதிப்பெண்)**

புத்தகத்தில் உள்ள படிவங்கள் மற்றும் பொதுத்தேர்வு வினாக்களில் கேட்கப்பட்ட படிவங்களை நிரப்பிப் பயிற்சி மேற்கொள்ளலாம். தவிரவும் தொடர்வண்டி இருக்கை முன்பதிவு - ரத்து படிவத்தைப் பொறுத்தவரை, வினாப்பகுதியைக் கவனித்துத் தேர்வருக்கான பெயரைக் (தேர்வர் பெயரை வினாப்பகுதியில் இருக்கும்) கவனமாக எழுதவும். ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பெயர்களை அதற்குரிய கட்டத்தில் குறிப்பிடவும்). சான்றுக்கான படிவங்கள் கடைசியில் தரப்பட்டுள்ளன.

**பயிற்சித் தாள் 17 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 20**

## வாழ்வியல் சூழல் வினா விடை

**வினா எண் 39**

**(5 மதிப்பெண்)**

1. மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கின்றான். சில நாட்களாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்ததும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்ற பெற்றோர் நினைக்கின்றனர்.

   **பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?**
   **நாம் எப்படிப்பட்ட நண்பர்களோடு நட்புகொள்ள வேண்டும்?**
   **இச்சூழலில் பயன்படுத்தவேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?**

2. பெற்றோர் எதிர்பாராத வகையில் வெளியூர் சென்றுவிடப் பூங்குழலி மட்டும் வீட்டில் தனியாகப் படித்துக்கொண்டிருந்தாள். பூங்குழலியின் தந்தையைத் தேடி ஒருவர் வீட்டிற்கு வருகிறார். தநதை வெளியூர் சென்றிருக்கிறார் என்று பூங்குழலி கூறினாலும் அவள் அதைக் கேட்காமல், அவளிடம் பேசிக் கொண்டே இருக்கிறார்.

   **அந்தச் சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர்கொள்வாள்?**
   **நீங்கள் பூங்குழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள்?**

3. இலக்கியா படிப்பில் படுசுட்டி. அவள்தான் வகுப்பில் எப்போதும் முதலாவதாக வருவாள். அவளுடைய தோழிகள் அவளுக்கென்ன கவலை? அவள் அம்மா ஓர் ஆசிரியர். அவளுக்குப் பாடத்தில் எந்த ஐயம் ஏற்பட்டாலும் உடனே தீர்த்துவிடுவார். எனவே, அவள் முதல் மதிப்பெண் பெறுவதில் வியப்பேதும் இல்லை என்று கூறுவர். பள்ளியில் ஆண்டுத்தேர்வுப் படிப்பதற்காக ஒருவாரம் விடுமுறை அளித்தார்கள். இலக்கியா வழக்கம்போல் படிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தாள். அப்போது தொலைபேசி அழைப்பு வந்தது. அவளுடைய அம்மா திடீரென்று மயக்கமடைந்துவிட்டார்கள் என்றும் உடனடியாக மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் அம்மாவுடன் பணியாற்றும் ஆசிரியர் கூறினார். இலக்கியா மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளானாள்.

   **இலக்கியாவின் முன்னேற்றத்திற்கு யார் காரணம்?**
   **இலக்கியாவின் அம்மாவை எதற்காக மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள்?**
   **அம்மாவுக்கு ஏற்பட்ட நிலை கண்டு இலக்கியாவின் நிலை என்ன?**

4. இரண்டு நாள் பெய்த மழையின் காரணமாக, அன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள். பள்ளிக்கு வந்த மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். ஆனால் கதிரவனின் வகுப்புத் தோழர்கள், அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள். பெற்றோருக்குத் தெரிந்தால் தன்னைக் கண்டிப்பார்கள் என்று கதிரவனுக்குத் தெரியும். திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்று அவன் நினைக்கிறான்.

   **இந்நிலையில் கதிரவன் தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான்?**
   **கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?**

5. எழிலரசனும் தமிழரசனும் நெருங்கிய நண்பர்கள். எழிலரசனுக்குத் தமிழரசன் மட்டுமே நண்பன் ஆனால் தமிழரசனுக்கோ வகுப்பில் மட்டுமின்றி பள்ளியிலும் அனைவரும் நண்பர்கள். பார்க்கும் யாவரிடத்திலும் அன்பாகவும் நட்பாகவும் நடந்துகொள்வான். தன்னால் முடிந்த உதவிகளும் செய்வான். எழிலரனும் நல்ல மாணவன்தான். ஆனால் தானாகச் சென்று பழகமாட்டான். வினாவுக்கு மட்டுமே விடை சொல்வான். தமிழரசனிடம் எல்லாரும் நெருங்கிப் பழகுவது எழிலரசனுக்கு வேதனை தந்தது.

   **இவர்களில் யாரைப்போல் இருப்பது நல்லது?**
   **தன்னிடம் அனைவரும் நெருங்கிப் பழக எழிலன் என்ன செய்யவேண்டுமென்று நீ நினைக்கிறாய்?.**
   **உங்களுக்கு நண்பர்கள் உண்டா? எத்தனை பேர்?**

6. பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள்தோள்மீது யாரோ கைவைப்பதாக உணர்கிறீர்கள். திரும்பிப் பார்த்தால் உங்களுக்கு அறிமுகமானவர்தான்.

**அப்போது உங்கள் செயல் எப்படி இருக்கும்?**
**இதுபோன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்டுவாய்?**
**இதுபோன்ற நிகழ்வு உங்களுக்கு ஏற்பட்டதுண்டா?**

7. பதினொன்றாம் வகுப்பில் சேர்ந்து சில நாள் ஆகிறது. தேவி அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள். அவள் கண்கள் இரண்டும் சிவந்துவிட்டன. ஆனால் அவள் பெற்றோர் அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை.. “நான்சொன்னது சொன்னதுதான். நீ படித்தது போதும். இன்னும் மூன்று மாதத்தில் உனக்குத் திருமணம் செய்யவேண்டியதுதான்.“ என்று கூறியவாறு அவளுடைய தந்தை வெளியே சென்றுவிட்டார். “அப்பா உனக்கு நல்லதுதான் செய்வார். அப்பாவின் பேச்சைக் கேள்“ என்று அம்மாவும் கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள் தேவி.

**இத்தகைய நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள்?**
**உங்களுக்கு இப்படியொரு நிலை ஏற்பட்டால் நீங்கள் எப்படி தீர்வு காண்பீர்கள்?**
**இச்சூழலில் பயன்படுத்தவேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?**

8. பூங்குழலி எல்லாரிடமும் அன்பாகப் பழகுவாள். அவள் வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களிடம் தன்மையாகப் பேசுவாள். அதனால் அவளை எல்லாருக்கும் பிடிக்கும். அவள் எப்போதும் புன்முறுவலோடு வளைய வருவாள். வீட்டிற்கு வருபவர்களை வாங்க, வாங்க உட்காருங்க, அம்மா வந்திடுவாங்களன்று வரவேற்பாள். அவளைப் புன்னகைப் பூங்குழலி என்றுதான் எல்லாரும் அழைப்பார்கள். அவர்கள் அவளை அழைப்பது சரிதானா, நீங்களே சொல்லுங்கள்.

**பூங்குழலியின் பண்பை நீ ஏற்றுக்கொள்கிறாயா?**
**உங்கள் வீட்டிற்கு யாராவது வந்தால், நீ எவ்வாறு வரவேற்பாய்?**
**பூங்குழலியைப்போல் நீயும் எல்லாரிடமும் நன்கு பழகுகின்றாயா?**

9. விழிமாற்றுத் திறனாளி ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடுநேரமாகக் காத்துக்கொண்டு இருக்கிறார். அந்த வழியாகப் பலரும் கடந்து செல்கின்றனர். ஆனால், அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை.

**இதுபோன்ற சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?**
**பிறருக்கு உதவுவதால் வெளிப்படும் பண்பு யாது?**

பயிற்சித் தாள் 17 காலம் 45 நிமிடம் மதிப்பெண் 20

## கடிதம் எழுதுதல்

**(வினா எண் 40)**

**(மதிப்பெண் 10)**

1. குடிநீர் வசதி வேண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு விண்ணப்பம்
2. பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.
3. பேருந்து வசதி வேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்குக் கூட்டுவிண்ணப்பம் எழுதுக..
4. நீ கண்டுகளித்த இடம் பற்றி நண்பனுக்குக் கடிதம்எழுதுக.
5. எழுத்தர் பணி வேண்டி தன் விவரப் பட்டியல் தயாரிக்க.
6. மின்விளக்குவசதி வேண்டி மின்வாரியத் தலைவருக்குக் கடிதம்.
7. சாலையைச் செப்பனிடவேண்டி நெடுஞ்சாலைத்துறை இயக்குநருக்குக் கடிதம்.